# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

# Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com



மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.செளந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச்செய்தி எண் 03/2018

நாள் 21.01.2018

மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச்செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி

ஊடகச் செய்தி

## போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட நட்டத்தை சரிக்கட்ட பொதுமக்கள் தலையில் பாறாங்கல்லை வைப்பதா? தமிழக அரசுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம்!

## உடனடியாக போக்குவரத்துக் கட்டணத்தை சீரமைத்து பொதுமக்களுக்குசுமையில்லாத கட்டணத்தை மாற்றி அமைக்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள்!!

தமிழக அரசு போக்குவரத்து கட்டணங்களை தடாலடியாக எந்தவித முன்னறிவிப்புமின்றி உயர்த்தியுள்ளதால் ஏழைகளும் நடுத்தர மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். உரிய காலஅவகாசம் கொடுக்காமல் பேருந்து கட்டணங்களை உயர்த்தியதால் பொதுமக்களில் பலபேர் பயணம் செய்து கொண்டிருந்தபொழுது பேருந்து கட்டணங்களுக்குத் தேவையான பணமின்றி திண்டாடியதை நாடு முழுவதும் காணமுடிந்தது. ஒரு நாள் பயணச்சீட்டு ரூ.50/-க்கானதை கொடுக்காமல் நிறுத்தியதாலும், போக்குவரத்து ஊழியர்களுக்கே, விலை உயர்த்தப்பட்ட ஒரு நாள் பயணச்சீட்டு உண்டா இல்லையா என்பது தெரியாததாலும் அவர்களாலும் அதுகுறித்து பொதுமக்களுக்கு தெளிவாக விளக்க முடியவில்லை. போதாக்குறைக்கு மாதாந்திர பயணச்சீட்டு (பாஸ்) வாங்கியவர்களை பேருந்தில் பயணம் செய்ய அனுமதிக்கலாமா இல்லையா என்பது குறித்தும் ஏற்கனவே முன்பதிவு செய்தவர்களிடமிருந்து வித்தியாச தொகையை வசூல் செய்வதா ? வேண்டாமா? என்பது குறித்தும் போக்குவரத்துத் துறையிடமிருந்து எந்தவித அறிவிப்பும் இல்லாததால் பல இடங்களில் பேருந்து நடத்துனர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றதும் நடந்தது. மாணவர்களின் மாதாந்திர பாஸ்களைப் பொறுத்தும் இதே குழப்படிதான் இருந்தது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

எதற்காக இவ்வளவு கட்டண உயர்வு என்று யாராவது கேள்வி கேட்டுவிடப்போகிறார்களே என்று அவரசகதியில் அள்ளித் தெளித்த கோலமாக இந்த கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் இவ்வளவு உயர்வை தாங்குவார்களா என்று தமிழக அரசு எண்ணிப் பார்த்ததாக தெரியவில்லை. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டிருக்கும் நட்டத்தை சரிபடுத்துவதற்கு போக்குவரத்து கட்டணங்களை உயர்த்தித்தான் சரி செய்ய வேண்டும் என்ற நோக்கில் மட்டுமே இந்தக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களை சரி செய்வதற்கு வேறு வழிகளை ஆராயாமல் அனைத்தையும் பொதுமக்கள் தலையிலேயே கட்டி ஏழைகளையும் நடுத்தர மக்களையும் அதற்கு இலக்காக்கி இருப்பது பெருத்த கண்டனத்திற்குரியதாகும்.

போக்குவரத்து துறையில் மலிந்திருக்கும் ஊழல்கள், தளவாட சாமான்கள் வாங்குவதில் பெறப்படும் கமிஷன்கள், பராமரிப்பு செலவில் காட்டப்படாத சிக்கனங்கள் போன்ற பலவழிகளில் கசியும் ஓட்டைகளை அடைத்தாலே போக்குவரத்து துறையில் ஏற்படும் நட்டங்களைத் தவிர்க்க முடியும். திறமையான நிர்வாகம் என்பது போக்குவரத்துத் துறையில் உள்ள அனைத்து இண்டு இடுக்குகளையும் செம்மைபடுத்தி சீர்படுத்த வேண்டிய ஒன்று. ஆனால் அது மற்றவைகளை சரிபடுத்தாமல் அனைத்து நட்டங்களையும் பொதுமக்கள் தலையில் சுமத்துவது சரியான நடைமுறையாக இருக்காது. பேருந்து கட்டண உயர்வுகள் மக்கள் தாங்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டிய அளவுக்கு இருக்க வேண்டுமே ஒழிய அதுவே மக்களுக்கு சுமையாக மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மக்கள் நல அரசின் கடமையாகும்.

ஆறுவருடங்களாக பஸ்கட்டணம் உயர்த்தப்படவில்லை என்றும் மற்ற மாநிலங்களின் பேருந்து கட்டணங்களை ஒப்பீடு செய்தும் அறிக்கை வெளியிட்டுள்ள போக்குவரத்துத்துறை அத்துறையில் நடந்துள்ள ஊழல்களால் ஏற்பட்டுள்ள இழப்புகளையும் பட்டியலிட்டிருந்தால் அது நேர்மையான அறிக்கையாக இருந்திருக்கும். எல்லா நட்டங்களுக்கும் பொது மக்களை பலிகடா ஆக்குவது மக்கள் நலனில் அக்கறை உள்ள அரசு செய்கின்ற காரியமில்லை. நடப்பது மக்கள் நல அரசாங்கமா அல்லது தனியார் நிறுவனமா என்ற கேள்வி இந்த கடுமையான பேருந்து கட்டண உயர்வின் மூலம் எழுந்துள்ளது.

எனவே, அதிகார வர்க்கத்திடம் நிர்வாகத்தை ஒப்படைத்து விட்டு ஓட்டை விழுந்த கப்பலில் பயணிக்கும் முதல்வரும், அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும் கப்பல் மூழ்குவதற்குள் கண்விழித்துக் கொள்வது நல்லது. உடனடியாக பேருந்து கட்டணங்களைக் குறைத்து மக்களுக்கு சுமையில்லாத வகையில் பேருந்து கட்டணங்களை சீரமைக்க தமிழக முதல்வர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பொதுமக்களைத் திரட்டி போராட்டம் நடத்தி பேருந்து கட்டணங்களை சீரமைக்க வழிகாணும்.

**(மு.அன்பரசு)**
பொதுச்செயலாளர்